1984 மார்ச் 14]

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

121. பொது (காவல்) துறையின் 20-11-1975 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 5-11-1983 ஆம் நாளிட்ட 1286 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935)] 10(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

122, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 4-9-1983 ஆம் நாளிட்ட 874 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939)] 16(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

இணைப்பு I.

ஏதுவுமில்லை.

493 (5-ம் பக்கத்திலுள்ளஉடுக்குறியிட்ட வினா எண். 307-க் கான விடையைக் காண்க).

திண்டுக்கல் நகரத்தில் நில அளவை எண். 56077, 2/2/3/3 மற்றும் 4/1-ல் உள்ள 4 ஏக்கர் 1854 சதுர அடி நிலத்தினை விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு வருவாய்த் துறை 1976-ல் ஒதுக்கீடு செய்தது. இந்நிலத்தில் விளையாட்டு அரங்கம் கட்ட முனைந்த சமயத்தில், 1977-ம் ஆண்டில் ஏற்பட்ட வேடசந்தூர் வெள்ளத்தினால் இம்முயற்சியில் தடங்கல் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விளையாட்டு அரங்கத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்புகள் தோன்றத் தொடங் கின. அவைகள் அவ்வப்போது அகற்றப்பட்டன என்றாலும் மைதானத்தின் மேல்புறத்தில் உருவாக்கப்பட்ட ஐயப்பன் கோயிலுக்கான ஆக்கிரமிப்பை அகற்ற முடியாத நிலை ஏற் பட்டது. இந்த கோயில் திண்டுக்கல் நகர ஐயப்ப பக்தர்கள் சங்கத்தாரால் உருவாக்கப்பட்டது. மதவழிபாடு எண்ண முடைய மக்களின் மத உணர்வை புண்படுத்த விரும்பாததால், அம்மாவட்ட ஆட்சியர், சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எனினும் திண்டுக்கல் நகர ஐயப்ப பக்தர்கள் சார்பில் நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சித் தலை